10th February 1959] [Sri V. Subbiah]

புள்டோஸர்கள் போன்றவைகளுக்கு இப்படி 3 சத வீதம் வரி போட்டால் என்ன செய்வது ? அதேபோல் மில்லட், கம்பு, கேழ்வரகு போன்ற முக்கியமான உணவுப் பொருள்களுக்கும், குழந்தைகள் சாப்பிடக்கூடிய பால் பவுடர், பால் போன்றவைகளுக்கும் வரி விதிக்கப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்து மார்க்கெட்டில் கொண்டு வரும்போதும் வரி விதிக்கப்படுகிறது. விவசாயத் துறையில் பொருளாதார முன்னேற்றம் காண முடியவில்லை என்று கிராம மக்கள் நகரப்புறங்களில் வந்து வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தால் விற்பனை வரி அவனை எந்தளவிற்கு கொண்டு வந்துவிடுகிறது என்று பார்க்க வேண்டும். இரண்டு வித கணக்குகள் வைத்துக் கொள்ளாமல் நேர்மையாக காலத்தைக் கடத்த வேண்டுமென்று நினைத்து வியாபாரம் செய்யப்போனால் இந்த விற்பனை வரி அவனை பொய் சொல்ல வைக்கிறது, இரண்டு கணக்குகள் வைக்கச் செய்கிறது. அதுமட்டுமல்ல. மனசாட்சிக்கு விரோதம் இல்லாமல் வியாபாரம் செய்ய வேண்டுமென்று விரும்பிய எனது நண்பர்கள் சிலர் அந்தத் தொழிலையே விட்டு விட்டு வெளியே போகும் நிலையில் இன்று கஷ்டப்படுகிறார்கள். ஆக, ஒழுங்கானவர்கள் இந்த நாட்டில் ஜீவிப்போம் என்றால், தவறு இழைக்காது வாழ்க்கை நடத்த விரும்பி நேர்மையாக நடந்தவர்கள் இன்று தெருவில் நிற்கக் கூடிய அளவிற்கு இந்த விற்பனை வரி அவர்களைக் கொண்டு வந்து வைத்து விட்டது எனக்குத் தெரியும். உணவுப்பொருள்களுக்கும், உரப் பொருள்களுக்கும் போடப்பட்டிருக்கிற வரி விவசாயிகளை, ஏழை மக்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது, எத்தனை தடவை அவர்கள் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது என்று பார்த்து எங்கு அவை உற்பத்தியாகிறதோ அந்தயிடத்திலேயே வரி போட வேண்டும். சாமான்களுக்கு அவைகளின் உற்பத்தி ஸ்தலத்திலேயே டாக்ஸ் போட்டு அனுப்பினால் அது வரவேற்கத்தக்கதாகயிருக்கும். இப்பொழுது அது பல ரூபங்களில் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, கடைசியாக, விவசாயிகள் உபயோகிக்கும் இனங்களின் மீதுள்ள வரியை கொஞ்சம் குறைத்தோ அல்லது நீக்கியோ ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Is any hon. Member anxious to speak now? (After a pause.) As no hon. Member is anxious to take part in the discussion just now, I adjourn the House till 9 a.m. tomorrow.

The House then adjourned.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—*STATUTORY ORDERS, RULES AND NOTIFICATIONS.*

80. *Notification issued with G.O. Ms. No.* 3448, *Home, dated* 10*th December* 1958 *amending rule* 337 *of the Madras Motor Vehicles Rules*, 1940. [*Laid on the table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939.]

81. *Notification issued with G.O. No.* 44, *Local Administration, dated* 9*th January* 1959, *extending the terms of office of the Members of the Ambasamudram Panchayat, Tirunelveli District, under section* 10 (1) *of the Madras Village Panchayats Act*, 1950. [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act X of* 1950.]